10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 267 வியாழக்கிழமை 15 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## பகையாளியாகவோ பங்காளியாகவோ வேண்டாம்

யாழ்ப்பாணம், பெப். 15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சிய மைக்கும் சபைகளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்காளியாகவும் இருக்கவேண் டாம், பகையாளியாகவும் இருக்கவேண் டாம். தமிழ்தேசிய மக்கள் முன்னணி ஆட்சியமைக்கும் சபைகளில் தமிழ் தேசிய கூட்டமைப்பும் பங்காளியாகவோ, பகையாளியாகவோ இருக்காது என 06▶

## பட்டப்பகலில் வட்டக்கச்சியில்
## இளம் தாய் வெட்டிக் கொலை!

கிளிநொச்சி, பெப்.15

பட்டப்பகலில் இளம் தாய் ஒருவர் கோரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி - வட்டக்கச்சி பத்துவீட்டுத் திட்டத்தில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தாயான பாஸ்கரன் நிரோசா (வயது - 24) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார். 06▶

## கட்டடம் இடிந்து வீழ்ந்து 7 பேர் பலி: இருவர் காயம்




கொழும்பு, பெப். 15

கொழும்பில் கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 7 பேர் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்தனர்.

கிராண்ட்பாஸ் பபாபுள்ளே மாவத்தையில் தேயிலை களஞ்சியப்படுத்தி வைக்கும் பழைமையான கட்டடம் ஒன்றே நேற்று மாலை இடிந்து வீழ்ந்தது.

இதில் அங்கு பணியாற்றிய 3 பெண்களும் 4 ஆண்களும் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்து கவலைக்கிடமான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ச)



## ஆர்னோல்டே யாழ். மாநகர மேயர் ஈசன் துணை மேயர்

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ். மாநகர மேயர் இமானுவேல் ஆர்னோல்ட்டே நியமிக்கப்படுவார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. துணை மேயராக து.ஈசன் நியமிக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மேயர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டவர் இ.ஆர்னோல்ட். மாநகர சபையின் 19 ஆம் வட்டாரத்தில் போட்டியிட்டு அவர் வெற்றி பெற்றிருந்தார். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றபோதிலும் 06▶

## கூட்டமைப்பு – முன்னணி
## கனவான் ஒப்பந்தம்?

யாழ்ப்பாணம், பெப்ரவரி 15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவை எழுதப்படாத கனவான் (ஜென்டில்மன்) ஒப்பந்தம் ஒன்றுக்கு இணங்கியுள்ளன என உள்வீட்டு வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

கடந்த 10 ஆம் திகதி நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்ப் பிரதேசங்களில் பெரும்பாலான சபைகளில் அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. இதனால் தொங்கு சபைகளே அமைக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் அதிக ஆசனங்களை பல சபைகளில் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடுத்த இடத்தைப் பெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் முக்கிய கட்சிகளுடன் உடன்பாடு ஒன்றை 06▶

## ஐ.ம.சு.மு தலைமையில் அரசு அமைய வேண்டும்
### ஜனாதிபதிக்கு கடும் நெருக்குதல்



கொழும்பு, பெப்ரவரி 15

ஜனாதிபதியின் கூட்டணிக் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணியே ஆட்சி அமைக்க வேண்டும். இந்தக் கூட்டணியைச் சேர்ந்த ஒருவருக்கே பிரதமர் பதவி வழங்கப்பட வேண்டும் என அக்கட்சியினர் அழுத்தம் தெரிவித்துளளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தேசிய அரசுகளின் கட்சிகளுக்கு ஏற்பட்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பதவியில் இருந்து 06▶



## மிஹின் லங்கா ஊழல்: விசாரிக்க குழு நியமனம்

கொழும்பு, பெப். 15

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ், ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் மிஹின் லங்கா நிறுவனங்களில் இடம் பெற்ற மோசடிகளை கண்டறிவதற்கான ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ், வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் கேட்டரிங் மற்றும் வரையறுக்கப்பட்ட மிஹின் 06▶

## உள்ளூராட்சிகளின் முதல் அமர்வு மார்ச் 2 இல்

கொழும்பு, பெப். 15

நாட்டின் சகல உள்ளூராட்சி சபைகளின் முதல் அமர்வு வரும் மார்ச் 2 ஆம் திகதி இடம்பெறும் என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி இன்று வெளியிடப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவுடனான சந்திப்பிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் அவர் சொன்னார்.

உள்ளூராட்சி சபைகளின் முதல் அமர்வு இன்று இடம்பெறவிருந்த நிலையில், உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலை இறுதி செய்வதில் ஏற்பட்ட தாமதத்தாலேயே அமர்வு பிற்போடப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

## யாழ். மாநகர சபையில் நாமே ஆட்சியமைப்போம்
### அழுத்து சொல்கிறார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ். மாநகர சபையில் நாமே ஆட்சி அமைப்போம் என உறுதியாகத் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொ.கஜேந்திரகுமார்.

நேற்று அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபை, நல்லூர், கரவெட்டிப் பிரதேச சபைகளில் வேறுகட்சிகளின், சுயேச்சைக் குழுக்களின் உறுப்பினர்கள் எம்முடன் இணைந்து செயற்பட 06▶

## அதிக ஆசனம் பெற்ற கட்சி
## ஆட்சி அமைக்க நாம் தடையல்ல



யாழ்பபாணம், பெப். 15

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் - யாழ்ப்பாணத்தில் எந்தக் கட்சிகளும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. இதனால் அதிகப்படியான ஆசனத்தைப் பெற்ற கட்சி ஆட்சி அமைக்க தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தடையாக இராது எனக் 06▶











# தமிழகப் பேச்சாளர்களுக்கு மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், பெப்.15

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு கீரிமலை நகுலேஸ்வரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பட்டிமன்றத்தில் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த நடுவரான பேராசிரியர் சாலமன் பாப்பையா, பேச்சாளர்களான திருமதி பாரதி பாஸ்கர், ராஜா ஆகியோர் யாழ்ப்பாண அடையாளங்களை உள்ளடக்கிய நினைவுக் கேடயமும் பதக்கமும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

அத்துடன் கடந்த ஆறு ஆண்டுகளாக இலங்கையில் துணைத்தூதுவராகப் பணியாற்றி புதுடில்லிக்குப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் துணைத்தூதர் ஆ.நடராஜனைப் அரசியல் பிரமுகர்களும் பல்வேறு அமைப்புக்களைச் சார்ந்தோரும் கௌரவித்தனர். (அ)

# வவுனியாவில் அடிதடி
## ஒருவர் காயம்

வவுனியா, பெப்.15,

வவுனியா இலுப்பையடியில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகி வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வவுனியா பூந்தோட்டம் பகுதியை சேர்ந்த குழுவினருக்கும் இலுப்பையடியில் சிகையலங்காரம் நடத்துபவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கைகலப்பிலேயே சிகையலங்கார நிலையத்தின் உரிமையாளரின் மகன் காயத்துக்குள்ளாகி வவுனியா பொது வைத்தியசாலையில சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# கஜேந்திரகுமார் - முதலமைச்சர் நல்லெண்ணச் சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப்.15,

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையில் விசேட சந்திப்பு ஒன்று நேற்று நடை பெற்றது. முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் இந்தச் சந்திப்பு சுமார் 20 நிமிடங்கள் வரை இடம்பெற்றுள்ளது.



இந்தச் சந்திப்பு தொடர்பாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்துத் தெரிவிக்கும் போது 'கடந்த சில மாதங்களாக முதலமைச்சரைச் சந்திக்க முடியாமல் இருந்தது. இந்நிலையில் நல்லெண்ணச் சந்திப்பாக இந்தச் சந்திப்பு நடைபெற்றிருந்தது. இதன்போது சமகால அரசியல் நிலைமைகள் குறிப்பாக பேசினோம். விசேடமாக உள்ளூராட்சி சபை தேர்தலின் பின்னர் தென்னிலங்கையில் உண்டான மாற்றங்கள் தொடர்பாக பேசினோம். மேலும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாகவும் பேசினோம். தமிழ்த் தேசிய அரசியலை அடுத்த கட்டம் நோக்கி நகர்த்துவது தொடர்பாகவும் பேசியிருக்கின்றோம்' என்றார். (இ)

# சமஷ்டியைக் கொடுக்க ரணில் தீவிர முயற்சி

கொழும்பு, பெப்.15

"மகிந்த ராஜபக்ச சர்வதேச நாடுகளை எதிர்த்துக்கொண்டு போரை முடித்து ஒற்றை ஆட்சியையும் நாட்டின் இறைமையையும் பாதுகாத்தார்.ஆனால், ரணிலோ ஒற்றை ஆட்சியை சிதைத்து சமஷ்டியைக் கொடுப்பதற்கு மிக வேகமாக செயற்படுகிறார்.அவரிடம் இருந்து பிரதமர் பதவியைப் பறித்து மகிந்தவிடம் கொடுத்துவிட்டு ரணிலை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்."

-இவ்வாறு உதய கம்மன்பில எம்.பி கூறியுள்ளார்.தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பில்"எதிரொலியிடம்" கருத்துக் கூறியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ச ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்காக தனது ஜனாதிபதிப் பதவியைக் கூட இழந்தவர்.இந்த நாட்டின் இறைமையை பாதுகாப்பதற்காக அவர் சர்வதேச சக்திகளுடன் மோதினார்.30 வருட யுத்தத்தை மகிந்த இரண்டரை வருடங்களில் முடித்து வைத்தார்.

20 வருடங்களுக்கு முன் புலிகளை ஒழிப்பதற்கான நடவடிக்கையை எடுத்திருந்தால் ஒரு வருடத்தில் புலிகளை ஒழித்திருக்க முடியும். இந்தியாவும் மேற்கு நாடுகளும் அதற்கு இடம்கொடுக்கவில்லை. அந்த நாடுகள் போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கொடுத்து அதனூடாகப் புலிகளின் இருப்பை நீடித்தன.


மகிந்த மாத்திரம்தான் இந்த வல்லரசு நாடுகளுக்கு அஞ்சாது புலிகளை ஒழித்துக் கட்டினார்.இதன்மூலம் அவர் இந்த நாட்டின் இறைமையையும் ஒற்றை ஆட்சியையும் பாதுகாத்தார். சர்வதேச சக்திகள், இனவாத சக்திகளை உருவாக்கி மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்தனர்.

ஆனால்.தாம் பிழை செய்துவிட்டோம் என்று மக்கள் இப்போது உணர்ந்துள்ளனர். மீண்டும் மகிந்த வேண்டும் என்று முடிவெடுத்துள்ளனர்.அதன் பிரதிபலிப்புதான் இந்தத் தேர்தல் முடிவுகள்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க சமஷ்டித் தீர்வை மிக வேகமாகத் தயாரித்துக் கொண்டு செல்கின்றார்.யார் எதிர்த்தாலும் இந்தியாவுடன் எட்கா ஒப்பந்தத்தைச் செய்வேன் என்று கூறியுள்ளார். எட்கா ஒப்பந்தம் ஊடாக நாட்டின் தொழில் வாய்ப்புகள் இந்தியாவுக்கு வழங்கப்படவுள்ளன. சீனாவுக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தை வழங்கியுள்ளார்.

மகிந்தவால் பாதுகாக்கப்பட்ட ஒற்றையாட்சியை சிதைத்து சமஷ்டித் தீர்வை வடக்கு-கிழக்குக்கு வழங்குவதற்கும் அதனூடாக நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்துவதற்கும் திட்டமிடும் ரணிலை உடனடியாக ஆட்சியில் இருந்து கவிழ்க்க வேண்டும். பிரதமர் பதவியைப் பறித்து மகிந்தவிடம் கொடுத்துவிட்டு ரணிலை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்" என்று அவர் கூறியுள்ளார். (அ)

# உள்ளூராட்சி சபைகளை மறந்துட்டாங்களே!




எந்தத் தேர்தலை எடுத்துக்கொண்டாலும் மத்தியில் ஆட்சியை தீர்மானிக்கும்-ஆட்சியைப் பிடிக்கும் தேர்தலாகவே இப்போது பார்க்கப்படுகின்றது.மகிந்த ஆட்சியை இழந்ததன் பின்தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் என்பது கிராமங்களில் சேவைகளை செய்யும் குட்டித் தேர்தலாகும். ஆனால்,அந்தத் தேர்தல் மத்தியில் ஆட்சியைத் தீர்மானிக்கும் அளவுக்கு இப்போது அதற்கு முக்கியத்துவம் கொடுத்துவிட்டனர்.

இந்தத் தேர்தலில் மகிந்தவுக்கு கிடைத்த வெற்றியைக் கொண்டு மத்தியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.சுதந்திரக் கட்சியோ எப்படி ஆட்சியைத் தக்க வைக்கலாம் என்று யோசித்து வருகின்றது.

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது பற்றி இவர்கள் அலட்டிக்கொள்வதாக இல்லை. அதை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு மத்திய ஆட்சியிலேயே கவனம் செலுத்துகின்றனர்.உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் பேச்சைத் தூக்கினாலே அது பற்றிப் பேசுவதற்கு அமைச்சர்கள் இப்போதைக்குத் தயார் இல்லையாம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்டத்தில் மூன்று சபைகளில் சுதந்திரக் கட்சியுடன்தான் இணைந்து ஆட்சி அமைக்க வேண்டியுள்ளது.இது தொடர்பில் பேசுவதற்காக அந்தக் கட்சியின் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான ஹபீஸ் நஸீர் அஹமட் நேற்றுக் காலை இரண்டு அமைச்சர்களுக்கு தொலைபேசி அழைப்பு எடுத்தாராம்.

அந்த அமைச்சர்களோ சொல்லி வைத்தது போல் ஒரே விதமாகப் பதிலளித்தார்களாம்."உள்ளூராட்சி சபைகளை பிறகு பார்க்கலாம்.இப்போது அமைச்சரவையை மாற்றுவதா அல்லது ஆட்சியை விட்டுக் கொடுப்பதா என்ற விடயத்தில்தான் ஈடுபட்டுள்ளோம். உள்ளூராட்சி சபைகள் ஒரு புறம் கிடக்கட்டும்.அதை பிறகு பார்க்கலாம்." என்று பதிலளித்தார்களாம்.

அரசில் உள்ள எவருடன் பேசினாலும் இவ்வாறுதான் பதில் வருகிறதாம்.எல்லோரின் கவனமும் இப்போது மத்திய ஆட்சியில்தான் உள்ளது.

எதிரொலி Ethiroli
வியாழன், 15 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com

## காற்றுள்ள போதே தூற்றுதல்

நாடே குழம்பிப் போய் இருக்கிறது. பிரதேச சபை தொடக்கம் பிரதமர் பதவி வரைக்கும் யார் பொறுப் பேற்பார்கள் என்பது பற்றி எவருக்குமே தெரியாதிருக் கிறது. ஒவ்வொருநாளும் மாலை கவியத் தொடங்கியதும் , இருள் பரவுகிறதோ இல்லையோ, 'இண்டைக்கு ரணில் பதவியை ராஜினாமா செய்யப்போகிறார்" என்ற செய்தி மட்டும் தவறாமல் எல்லோர் காதுகளிலும் போய்ச் சேர்ந்துவிடுகின்றது. அந்தச் செய்தியை உறுதி செய்வது போல தன் பரிவாரங்களை அழைத்துக் கொண்டு, மைத்திரியைப் பார்க்க இராத்திரி ரவுண்டப்புக்கு கிளம்பி விடுகிறார் பிரதமர் ரணில்.

வீதிகளை அபிவிருத்தி செய்யவும், குப்பைகளைக் கிள்ளவும் மட்டுமே உதவக் கூடிய தேர்தலில், ஒட்டு மொத்த நாடே அலறித் துடித்துக் கொண்டிருக்கிறது. உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் வந்தவுடன், அங்கு வென்ற கட்சிகள் செய்திருக்க வேண்டிய வேலை, சட்டுப் புட்டென்று பதவியை ஏற்றுக்கொண்டு, பிரதேசத்தில் உள்ள குறைபாடுகளைக் களைந்து அபிவிருத்திப் பணி களை முன்னெடுக்கும் வழிகளை அந்தக் கட்சிகள் கண்டறிய முயற்சித்திருக்க வேண்டும். ஆனால் பதவி யேற்பை மார்ச் 2 ஆம் திகதிக்கு அரசு ஒத்தி வைத் திருக்கிறது. அத்தோடு, இந்த உள்ளூராட்சித் தேர்தலில் பெரும்பான்மையான உள்ளூராட்சி சபைகளைக் கைப் பற்றியதால், மொத்த இலங்கையும் தங்களுக்கு மீண்டும் அடிமையாகிவிட்டதைப் போன்று, 'உடனடியாக நாடா ளுமன்றத்தைக் கலைத்து, பிரதமர் பதவியை மகிந்தவுக்கு வழங்குங்கள்" என்ற கோஷத்தை மகிந்தவின் ஆதரவுக் கட்சியான பொதுஜன பெரமுன உரக்க எழுப்பத் தொடங்கிவிட்டது.

இத்தனைக்கும் அந்தக் கட்சியிடம், நாடாளுமன்றத் தில் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கக் கூடிய எண் ணிக்கையான எம்.பிக்களும் இல்லை. அத்தோடு நால–ரை வருடங்கள் கழியும் முன்னர் ஒரு நாடாளுமன்றத்தை ஜனாதிபதி நினைத்த மாத்திரத்தில் கலைத்து விட்டு, இன்னொரு தேர்தலை வைக்கமுடியாது. ஏற்கனவே 'ஆட்சி யாருக்கு?' என்ற குழப்பத்தால், மைத்திரியும், ரணிலும் தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டிருக்கிறார் கள். பாலும் தேனுமாக இருந்த இந்த அரசியல் கூட்டணி, இப்போது நீரும் நெருப்புமாகி விட்டது. பிரதமர் பதவி யில் இருந்து ரணில் விலகினால் மட்டுமே இப்போது உருவாகியுள்ள அரசியல் குழப்பம் ஓரளவுக்குத் தெளி யும் என்பது மைத்திரியின் வாதாம். ஆனால் இத்த னைக்கும் மைத்திரி தலைமையிலான சுதந்திரக் கட் சிதான், உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட் சியை விடவும் படுதோல்வியைச் சந்தித்துள்ளது. அப் படிப்பார்த்தால் உண்மையில் மைத்திரிதான், பதவியை விட்டுப் போயிருக்க வேண்டும். குறைந்த பட்சம் கூட்சித் தலைமைப் பதவியையாவது உதறியிருக்கலாம். ஆனால், தன் பிடியைக் கைவிட மனமில்லாத மைத்திரி, ரணில் பதவி விலக வேண்டுமெனப் பிடிவாதமாக இருப்பது முரண் நகை.

குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது பேரினவாதத் துக்குக் கைவந்த கலை. ஆனால் இப்போது முன் னெப்போதும் இல்லாத அளவுக்கு குட்டை குழம்பிச் சிதைந்துள்ளது. எப்படியாவது அதைத் தெளியவைக்க , பேரினக் கட்சிகள் அந்தரப்படுவது நன்கு புரிகின்றது. ஏற்கனவே அரசியல் நிலையின்மை காரணமாக இலங்கைப் பங்குச் சந்தை படுபாதளத்தை நோக்கி, சரி யத் தொடங்கியுள்ளது. எனவே எவ்வளவு காலம் இந்தக் குழப்பம் நீடிக்கிறதோ அந்தளவுக்கு புதிதாக வரப்போகும் அரசுக்கு பொருளாதார நெருக்கடி இறுக்கமாகும். எனவே விரும்பியோ விரும்பாமலோ இந்தக் குழப்ப நிலைக்கு தீர்வு காண வேண்டிய கட்டாயம் மைத்திரி, ரணிலுக்கு மட்டுமல்லாது மகிந்தவுக்கும் உண்டு. இத் தகையை சூழலை தமிழர் தரப்பு மிகக் கவனமாகக் கையாள வேண்டும். அவர்களின் ஆட்சி பிடிப்புக்காக தமிழர் தரப்புகள், கறிவேப்பிலையாக மாறமால், இந்தத் தருணத்தில் சரியான பேரம் பேசலை நிகழ்த்தி, கிடைக் கின்ற உரிமைகளை வாங்கிவிட முயல வேண்டும். காற்றுள்ள போது தூற்றிக் கொள்ளலில் தவறொன்று மில்லை.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# கூட்டு அரசை இழுக்க சிறப்புக் குழு நியமனம்

கொழும்பு, பெப்.15,

தற்போதைய கூட்டு அரசாங்கத்தை எவ்வாறு முன்கொண்டு செல்வது என் பது தொடர்பாக, முடிவு செய்வதற் கான சிறப்புக் குழு ஒன்றை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடையே நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட பேச்சி லேயே இம் முடிவு எட்டப்பட்டது.

ஐக்கிய தேசிய முன்னணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்களான சம்பிக்க ரணவக்க, மனோ கணேசன் மற்றும் ஐ.தே. கவின் தலைவர்களுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சை நடத் தியதை அடுத்து ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவைச் சந்தித்தார்.

ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் நடத்தப்பட்ட இந்தப் பேச்சுக்களின் முடிவிலேயே, சிறப்பு குழு ஒன்றை அமைத்து, கூட்டு அரசாங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள் குறித்து முடிவெடுப்பது என்று இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் முடிவில், அமைச் சர் சஜித் பிரேமதாச இந்த தகவலை வெளியிட்டார். நேற்றைய அமைச்சர வைக் கூட்டத்தின் போது, ஐ.தே.க. மற் றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உள் ளடக்கி அமைக்கப்படவுள்ள இந்த சிறப்புக் குழு விரைவில் தமது முடிவை அறிவிக்கும் என்றும் அவர் கூறினார். (ச)

## டிப்பர் வாகனங்களிடையே நசியுண்டு இளைஞர் பலி!



திருகோணமலை, பெப்.15

திருகோணமலை சீனன்குடா பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கிளப்பன் பேக் பகுதியில் டிப்பர் வாகனத்தை முந்திச்செல்ல முற் பட்ட இரு சக்கர மோட்டார் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளா கியுள்ளது.

இன்று இடம்பெற்ற இவ் விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநரான 22 வயதுடைய ஒரு வரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

டிப்பர் வாகனம் ஒன்றை முந்திச்செல்ல முற்பட்ட போது எதிரே வந்த டிப்பர் வாகனத்தில் மோதுண்டதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

இரு டிப்பர் வாகனங்களுக்கு இடையில் சிக்குண்ட நிலையில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஸ்தலத்திலேயே பலியானார்.

மூதூர்-5, பெரியபாலம் பிர தேசத்தை பிறப்பிடமாக கொண்ட உம்முள் ஹசன் சப்ரி என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சடலம் கிண்ணியா தள வைத் தியசாலையில் வைக்கப்பட்டுள் ளது. (ச)

## பஸ் நிலையத்தில் மோதல் நேரக் கணிப்பாளர் காயம்

வவுனியா, பெப்.15

வவுனியா புதிய பஸ் நிலையத் தில் இ.போ.ச ஊழியர்கள் 10 பேரடங் கிய குழுவொன்று , தேசிய போக்கு வரத்து ஆணைக்குழுவின் நேரக் கணிப்பாளரை தாக்கியுள்ளது. இச்சம்பவத்தில் காயமடைந்த 38 வயதான உதான சம்பத் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார். குறித்த சம்பவம் நேற்று முன் தினம் இரவு 10 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

வவுனியா புதிய பஸ் நிலையத் தில் நின்று கொண்டிருந்த தன்னை நெருங்கிய, மதுபோதையில் வந்த இ.போ.ச ஊழியர்கள் வாக்குவாதத் தில் ஈடுபட்டதுடன் தாக்கியதாக வும் , இது தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் நேரக்கணிப் பாளர் தெரிவித்தார். (இ)

## புள்ளடிக்குப் பதில் இதயம்

இம்முறை கட்சிகள் தத்தமது கட் சிகளுக்கு வாக்களிக்குமாறு மக்களை வலியுறுத்திய நிலையில், எந்தவொரு கட்சியும் வாக்குச்சீட்டில் புள்ள டியிடுவது தொடர்பில் தெளிவுப் படுத்த தவறியமையால் பல வாக் குச்சீட்டுகளில் புள்ளடிக்கு பதிலாக இதயங்கள் வரையப்பட்டிருந்ததாக சுட்டிக்காட்டினார்.

தேர்தல் பெறுபேறுகளின் தாம தத்திற்கான பொறுப்பை தான் ஏற்றுக்கொள்வதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார்.

தமிழ் மற்றும் சிங்கள மொழி தெரிந்த அதிகாரிகளின் பற்றாக் குறையே தேர்தல் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு தாமதமானதற் கான காரணம் என்றும், எனவே உரிய பரீட்சைகளை நடத்தி இரு மொழியிலும் தேர்ச்சிப் பெற்றவர் களை நியமிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். (ச)

# கோத்தா கைது நீடிக்கிறது தடை

கொழும்பு, பெப்.15

முன்னாள் பாதுகாப்புச் செயலா ளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்ய விதிக்கப்பட்டிருந்த இடைக் காலத் தடை உத்தரவு மேலும் நீடிக் கப்பட்டுள்ளது.



தன்னை கைது செய்ய தடை உத் தரவு பிறப்பிக்குமாறு கோத்தபாய ராஜபக்ஷ மேன்முறையீட்டு நீதிமன் றில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்படி முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வை எதிர்வரும் 28ஆம் திகதி வரை கைது செய்ய நீதிமன்றம் தடை விதித்தது.

பொதுவுடைமைகள் சட்டத்தின் கீழ் அவரை கைது செய்யவதற்கு எதிராகவே இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச)

## வவுனியாவில் விபத்து: அறுவர் படுகாயம்

வவுனியா, பெப்.15

திருக்கேதீஸ்வரத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த வான் விபத்துள்ளாகியதில், அதில் பயணித்த 6 பேர் படு காயங்களுக்குள்ளான நிலை யில், வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட் டுள்ளனர்.

சிவராத்திரி வழி பாடுகளை முடித்துத் திரும் பிக்கொண்டிருந்த போதே இச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

வவுனியா, வேப்பங்குளம் 6ஆம் ஒழுங்கைப் பகுதியில், வவுனியாவில் இருந்து கற் பகபுரம் நோக்கி சென்ற பஸ் ஸுடன் , வான் மோதியே விபத்து ஏற்பட்டது. இதில் வானில் பயணித்த குழந்தை உட்பட 6 பேரும் படுகாயமடைந்தனர். மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)



## இன்று நாளும் கோளும்

15.02.2018 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் மாசி மாதம் 03 ஆம் நாள்
அமாவாசை பி.ப. 03.23 மணி வரை
இராகுகாலம் 01.30 - 03.00
திருவோணம் காலை 08.23 மணி வரை
சுபநேரம் மு.ப. 10.30 - 11.30
சித்தயோகம்
எமகண்டம் மு.ப. 06.00 - 07.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நட்பு | விருத்தி | தேர்ச்சி | நோய் | சிக்கல் | எதிர்ப்பு | நன்மை | புகழ் | பொறுமை | போட்டி | சுபம் | ஆக்கம் |

# இலஞ்ச மோசடிக்கு எதிராக மக்கள் நிகழ்ச்சித் திட்டம்

கொழும்பு, பெப்.15

இலஞ்சம், ஊழல், மோசடி மற்றும் வீண்விரயங்களுக் கெதிரான விரிவான மக்கள் நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பிப்பதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அண்மையில் வழங்கிய உறுதிமொழிக்கேற்ப, அனைத்து மக்களினதும் கருத்துகள், முன்மொழிவுகள் மற்றும் செயற் திறமான பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தின் ஒருங்கிணைப்புடன் மேற் கொள்ளப்படும் இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பொன்று, அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

புதியதோர் யுகத்தை நோக்கி நாட்டைக் கொண்டு செல்லும் வகையில் ஊழல், மோசடி, இலஞ்சம் மற்றும் வீண் விரயங்களுக்கெதிரான விரிவான அரசியல் மற்றும் சமூக கலாசாரத்தைக் கட்டியெழுப்புதல், ஆட்சிமுறைமையை வலுப்படுத்தல், சட்ட முறைமையையும், சட்ட நிறுவனங் களையும் முறைப்படுத்துதல் இந்த நிகழ்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

ஊழல், மோசடி,லஞ்சம் மற்றும் வீண்விரயங்களை நாட்டிலிருந்து ஒழித்து, நாட்டை சுபீட்சமானதொரு தேசமாகக் கட்டியெழுப்பும் மக்கள் அரணின் ஒரு தூணாக இந்தத் தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் ஒன்றிணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக, தமது கருத்துகள், முன்மொழிவுகளை 2018 மார்ச் மாதம் 01ஆம் திகதிக்கு முன்னர் 'ஊழலுக்கெதிரான தேசிய நிகழ்ச்சித் திட்டம்', ஜனாதிபதி அலுவலகம், கொழும்பு - 1 என்ற முகவரிக்கு அல்லது 011- 2431502 என்ற தொலைநகலின் ஊடாகவோ அல்லது zerocorruption@presidentsoffice.lk என்ற மின் னஞ்சலினூடாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள் ளப்படுகின்றது. மேலதிக விவரங்களை 076 4654600/ 077 5770882 என்ற அலைபேசி இலக்கங்கள் ஊடாக அழைக்க வும். (அ)

# தமிழில் பாடிய தேசிய கீதமே படுதோல்விக்கு காரணமாம்

கொழும்பு, பெப்.15

உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.க. வுக்குப் பின்னடைவு ஏற்பட்டமைக்கு சுதந்திர நாளன்று தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டதே முக்கிய காரணம் என்று வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன.தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலை மையில் நேற்றுமுன்தினம் நடந்த ஐ.தே. க.வின் உயர்மட்டக் கூட்டத்திலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள் ளார்.

தமிழில் தேசிய கீதம் பாடப்பட்ட ஒவ்வொரு முறையும், ஐதேக, 50 ஆயி ரம் சிங்கள பௌத்த வாக்குகளை இழந் துள்ளது என்றும் திலக் மாரப்பன கூறி




யுள்ளார்.

ஆனால் அவரது இந்தக் கருத்தை நிதி அமைச்சர் மங்கள சமரவீர நிராகரித் துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் சஜித் பிரேமதாச, சமுர்த்தி அமைச்சு ஐதேகவிடம் இல்லாததால், மக்களுடன் அதிகளவில் நெருக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை என்றும், எனவே அந்த அமைச்சை பெற்றுக் கொள் வதற்கு பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள் ளார்.

விவசாயிகளுக்கு உரிய வேளையில் இரசாயனப் பசளை கிடைக்காமையி னால் கிராமங்களில் ஐதேகவுக்கு பின் னடைவை ஏற்படுத்தியுள்ளதாக அமைச் சர் ஹரிசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிங்கள பௌத்த வாக்கு களைப் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)



## நெல்லியடியில் விபத்து

நெல்லியடி, பெப்.15

நெல்லியடி முடக்காட்டு சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் மூன்று இளைஞர்கள் படு காயமடைந்தனர். எதிர் எதிரே வந்த மோட்டார் சைக் கிள் இரண்டும், ஒன்றுடன் ஒன்று மோதியதாலேயே இந்த விபத்து நேர்ந்தது என நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-11)



## லசந்த வழக்கில் அதிகாரி கைது

கொழும்பு, பெப்.15

சண்டே லீடர் பத்திரிகையின் முன் னாள் பிரதம ஆசிரியர் லசந்த விக் ரமதுங்க படுகொலை தொடர்பில், ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ்மா அதி பர் (டி.ஐ.ஜி) பிரசன்ன நாணயக்கார, குற்றப்புலனாய்வு பிரிவினரால், நேற்று முன்தினமிரவு கைதுசெய்யப்பட்டுள் ளார். (அ)

# 50,000+ வீடுகள் மற்றும் வியாபாரங்களை இணைக்கும் Bell4G

இலங்கையின் முதன்மையான தொலைத் தொடர்பு சேவை வழங்குனராக திகழும் லங்காபெல் Bell4G என்ற நான்காம் தலைமுறை LTE இணைய தொடர்பி ணைப்பு சேவையை வழங்கியதன் ஊடாக 50,000 இற்கும் அதிகமான வீடுகளையும் வியாபார நிலையங்களையும் சென்றடைந்த தன் மூலம் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை அடைந்திருக்கின்றது. மிகக் குறுகிய காலத் திற்குள்ளேயே Bell4G தனது சேவை வழங்கும் வாடிக்கையாளர் தளத்தை 15000 இலிருந்து 50,000+ ஆக அதிகரித்திருக் கின்றது. இதன்மூலம், நாடெங்கும் உள்ள 4G தொழில்நுட்ப பயன்படுத்துனர்களின் விருப்பத்திற்குரிய தெரிவாக இது மாறியி ருக்கின்றது.

பல்-செயற்பாட்டு ஆற்றலை வழங்கும் கவர்ச்சிகரமான இணைப்புப் பொதிகள், மேலதிக நெரிசலற்ற நேர கொள்திறன் மற்றும் சந்தையில் ஆகக் குறைந்த கட்டணம் போன்ற சிறப்பம்சங்களை கொண்டுள்ள Bell4G ஆனது இணைய தொடர்பிணைப்பு விடயத்தில் நிராகரிக்க முடியாத விதத்தில் ஒரு விருப்பத்திற்குரிய தெரிவாக காணப் படுகின்றது.

"லங்கா பெல் Bell4G சேவைக்கான கேள்வி மலைக்கவைக்கும் உயரத்தை எட்டியுள்ள துடன், அதனது விரைவு, நம்பகத்தன்மை, தங்குதடையற்ற தொடர்பிணைப்பு மற்றும் கொடுக்கின்ற பணத்திற்கு உரிய பெறுமதி போன்ற சிறப்பம்சங்களின் காரணமாக நாட் டில் விருப்பத்திற்குரிய இணைய சேவை வழங்குனர் என்ற மைல்கல் வெற்றி ஒன்றை இது உருவாக்கியுள்ளது" என்று லங்கா பெல் லிமிட்டெட் முகாமைத்துவப் பணிப்பாள ரான கலாநிதி. பிரசாத் சமரசிங்க தெரி வித்தார்.

"புத்தாக்கம் மற்றும் ஆய்வுப் பணிகளில் லங்கா பெல் கொண்டிருக்கின்ற அர்ப்பணிப் பானது ஒரு குறுகிய காலப்பகுதிக்குள் விரை வான வெற்றியுடன் தனது இலக்குகளை அடைந்து கொள்ளும் விடயத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தந்திருக்கின் றது" என்றும் கலாநிதி. பிரசாத் சமரசிங்க மேலும் குறிப்பிட்டார்.

LTE தொழில்நுட்பத்தின் அடுத்த பரி ணாமத்தை பரீட்சார்த்தம் செய்யும் நடவ டிக்கையில் லங்கா பெல் தற்போது ஈடுபட் டுள்ளது. இது 4.5 G வலையமைப்பாகும். Soft Split மற்றும் Career Aggregation போன்ற மிக முன்னேற்றகரமான பொறி முறையை பயன்படுத்துவதன் மூலம் இந்த தொழில்நுட்பத்தை செயற்படுத்துவதன் கார ணமாக, வாடிக்கையாளர்கள் தங்குதடை யற்ற சேவையையும் விரைவான தரவிறக்க வேகத்தையும் பெற்றுக் கொள்ளக் கூடிய தாக இருக்கும்.

சந்தா வாடிக்கையாளர்களுக்கு விசுவாச வெகுமதி நிகழ்ச்சித் திட்டத்தை வழங்குகின்ற ஒரேயொரு இணைய சேவை வழங்குனராக BELL4G காணப்படுகின்றது. இதன்மூலம் வாடிக்கையாளர்கள் வலையமைப்புடன் செல விடும் நேரத்திற்கு அமைவாக, இலவச தரவு வெகுமதியை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.



ART TV CEO Forum நிகழ்வில், Bell4G மூலம் 50000 வீடுகள் மற்றும் வியாபாரங்கள் தொடர் பிணைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அறிவிக்கப்பட்ட போது, லங்கா பெல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி. பிரசாத் சமரசிங்க மற்றும் தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்ட மைப்பு அமைச்சர் கௌரவ. ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் அந்த குறிப்பிடத்தக்க மைல்கல்லை அடை யாளப்படுத்துவதை படத்தில் காணலாம்.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 02 . 06 . 1995



விண்ணில் 17 . 01 . 2018

அமரர்

## சிறிசந்திரன் கனுசாந்த்

எந்நாளும் குறையாத அன்போடு
புன் முறுவல் தவழும் முகத்தோடு
கண்மணியாய் வந்த கனுவே!

வஞ்சமில்லா உந்த முகம்
நெஞ்சிலாடுதே-நீ கதைகள்

சொல்லி சிரித்ததெல்லாம்
கண்ணில் தோன்றுதே!
காலன் உனைப் பாதிவயதில்
ஏன் பறித்தானோ?
தேற்றுவாரின்றி
தேம்பிழுகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 16.02.2018 வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.


இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.

கண்ணீருடன்
குடும்பத்தினர்

# தனியரசு அமைப்போம்

## சமல் ராஜபக்ச சபதம்





கொழும்பு, பெப்.15

"இந்த அரசாங்கம் மக்களின் கருத்துக்கு மதிப்பளிப்பதாயின், இரண்டு வருடங்களை இழுத்தடிக்காமல் ஜனாதிபதித் தேர்தலையும், நாடாளுமன்றப் பொதுத் தேர்தலையும் ஒரே தினத்தில் நடத்தி முடிக்க வேண்டும் . எதிர்வரும் நாட்களில் தனியாக ஒரு அரசாங்கம் அமைப்போம்" என முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச தெரிவித்தார்.

திஸ்ஸமஹாராமயில் வைத்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"மக்களின் விருப்பம் இல்லாமல் நான் பிரதமர் பதவி உட்பட எந்தவொரு பதவியையும் எடுக்க மாட்டேன். அவ்வாறு பதவியொன்றை எடுப்பதை விட வீட்டில் பாய் ஒன்றைப் போட்டு தூங்குவது சிறந்தது. மக்களின் விருப்பத்துக்குள்ள கட்சிக்கு ஆட்சியமைக்க வழியமைப்பதே இந்தத் தருணத்தில் ஜனாதிபதி செய்ய வேண்டிய பிரதான பணியாகும்.

எம்மிலிருந்து பிரிந்து சென்றவர்களுடனோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியுடனோ இணைந்து அரசாங்கம் ஒன்றை அமைக்க விரும்புவதில்லை. பொதுஜன பெரமுனவுக்கு வாக்களித்த மக்கள் அதனை விரும்ப மாட்டார்கள் என்பதே எமது நம்பிக்கையாகும்.

எமது அரசியல் கொள்கை வித்தியாசமானது. நாம் எவருடனும் இணைந்து ஆட்சியமைக்க மாட்டோம் எதிர்வரும் நாட்களில் தனியாக ஒரு அரசாங்கம் அமைப்போம்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## தேர்தல் வருமானம் 80 மில்லியன் ரூபா

கொழும்பு, பெப்.15

சமீபத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல் வாக்களிப்பிற்கு இறுதி சில நாட்களில் பொதுப்போக்குவரத்து சேவையை வழங்கியதன் மூலம் இலங்கைப் போக்குவரத்து சபை 80 மில்லியன் ரூபாவை வருமானமாக பெற்றுள்ளது.

இது தொடர்பாக பையின் போக்குவரத்து பொது முகாமையாளர் ஆர்.ரி. சந்திரசிறி கருத்து தெரிவிக்கையில்,

தேர்தல் பணிகளுக்காக பஸ்களை வழங்கியதன் மூலம் அறவிடப்பட வேண்டிய தொகை எதிர்வரும் சில தினங்களில் தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவுள்ளது என்று குறிப்பிட்டார். (அ)

## நாணயத் தாள்களை மார்ச் 31 வரை மாற்றலாம்



கொழும்பு, பெப்.15

சேதமடைந்த நாணயத் தாள்களை வங்கிகளில் மாற்றிக் கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ள காலம் மார்ச் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடையும் என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

"நாணயத் தாள்களின் தூய்மை நாட்டின் நற்பெயரில் தாக்கம் செலுத்துகிறது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது நாட்டின் நாயணத்தாள்கள் சுத்தமில்லாத நிலையில் காணப்படுகின்றன.

இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்கள் உள்நாட்டு நாணயத்தாள்களின் சுத்தம் பற்றியும் கவனம் செலுத்துகிறார்கள். நாணயத் தாள்களின் சுத்தம் பற்றி மக்கள் மத்தியில் போதிய விளக்கம் இல்லை" என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

## இப்படியும் கொண்டாடலாம்

கொழும்பு, பெப்.15

மத்துகம பிரதேச சபைக்கு இம்முறை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் தனது வெற்றியை வித்தியாசமான முறையில் கொண்டாடியுள்ளார்.

பட்டாசுகளை கொளுத்தி வெற்றியை கொண்டாடுவதற்குப் பதிலாக அந்த வேட்பாளர் தனது ஆதரவாளர்களுடன் இணைந்து மத்துகம நகரத்தைச் சுத்தம் செய்து வெற்றியை கொண்டாடியுள்ளார்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்காக அவருக்கு ஆதரவாளர்கள் மற்றும் பிரதேச வாசிகளின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் தொடர்ச்சியாக மக்களுக்கு சேவை செய்வதே தனது நோக்கம் என்று வேட்பாளரான லலித் ரணசிங்க கூறியுள்ளார். (அ)

## ஆட்சிக்கு மகிந்த ஆதரவுக்கு மைத்திரி



கொழும்பு, பெப்.15

"நுவரெலியா மாவட்டத்தில் 11 உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியை கைப்பற்றுவதற்கே, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் கைகோர்த்துள்ளோம். எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிசேனவுக்கே தொடர்ந்தும் நாம்ஆதரவளிப்போம்" எனத் தெரிவித்துள்ளார் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான ஆறுமுகன் தொண்டமான்.

"இந்தத் தேர்தலில், நுவரெலியா மாவட்டத்தில், கடைசி நிமிடம் வரையிலும் பணம் விளையாடியது. சிற்சில இடங்களில், றைஸ் குக்கர்கள் வழங்கப்பட்டன. அவர்கள் பணத்தை வைத்து சிலர் விளையாடினர். மூளையை வைத்து நான் விளையாடினேன். அவ்வளவு தான் வித்தியாசம்" என்றும் அவர் கூறினார். (அ)

## கழுகின் சேட்டையால் குளவிகள் தாக்குதல்

ஹட்டன், பெப்.15

ஹட்டன் டிக்கோயா மெணிக் தோட்டத்தில் தேயிலைக் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் சிலர் குளவித் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

நேற்று முன் தினம் பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது , காயமடைந்த 12 தோட்டத் தொழிலாளர்கள் டிக்கோயா ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

மரமொன்றில் இருந்த குளவி கூட்டை கழுகு ஒன்று தாக்கியதிலேயே குளவிகள் கலைந்து தொழிலாளர்களைக் குறிவைத்து தாக்கின. (அ)

## அமெரிக்க – இந்திய தூதுவர்கள்

### ஜனாதிபதி, பிரதமரை சந்தித்துப் பேச்சு

கொழும்பு, பெப்.15,

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரும் இந்தியத் தூதுவரும் நேற்று முன்தினம் அவசரமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டு அரசின் பங்காளிக் கட்சிகள் பின்னடைவை சந்தித்ததை அடுத்து, கொழும்பு அரசியலில் குழப்பங்கள் தோன்றி கூட்டு அரசாங்கம் ஆட்டம் காணும் நிலையை அடைந்துள்ள சூழலில், நேற்றுமுன்தினம் காலை இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து, அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப்பும் ஜனாதிபதியையும், பிரதமரையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இந்த நிலையில், கொழும்பு அரசியலில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிப்பதில், இராஜதந்திரிகள் ஈடுபட்டுள்ளனர் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (இ)

## பிறகு...நாங்கள், இருந்தென்ன? செத்தென்ன?

தொடக்கமே ஈடாட்டமாக் கிடக்கு. போகப்போக என்ன நடக்குமோ? தெரியாது. எல்லாரையும் அரிவரியிலை இருந்து படிக்கத் துவங்கிறதா இந்த எலக்சன் ஆக்கிப் போட்டுது. நாங்கள் கெட்டிக்காரர். எங்களுக்கு எல்லாந் தெரியும். இருக்கிறதெண்டால் இருங்கோ. இல்லாட்டி வாயைப் பொத்திக் கொண்டு போங்கோ, எண்டு சொன்னவை அத்தனைபேரும் இப்ப "கம்" எண்டு இருக்கினம்.

இந்த எலக்சன் நடந்ததாலை கன பேற்றைக் குட்டு வெளிப்பட்டுது். பெரய் சொன்னவை கண் பிதுங்க இனி என்னத்தைச் சொல்லுறது எண்டு தெரியாமை நிக்கினம். ஓ.எல் சோதினை மறுமொழி வந்த உடனை, அடுத்தது என்ன? எண்டு பெயில்விட்டவை யோசிப்பினம் எல்லே? அது மாதிரிக் கனபேர் இப்ப யோசிக்கினம். எட இப்பிடிச் செய்திருக்கலாம்! அப்பிடிச் சொல்லி இருக்கலாம், எண்டு தங்களைத் தாங்கள் திட்டிற சனங்களும் இருக்கினம். மொத்தத்திலை பாத்தால் ஐந்தொகை சரியாத்தான் இருக்கிது.

சொன்னது வேறை. செய்தது வேறை. எட ஒண்டும் புதுசாச் செய்ய வேண்டாம். தர்மமாச் செய்தாலே போதுமெல்லே? வந்து கொஞ்சம் பொறுத்திருக்கலாம். வந்த உடனை உங்கடை வித்துவத் தன்மையைக் காட்டிறதே? நாடாளுமன்ற எலக்சன் முடிஞ்ச உடனையே சளி பிடிச்ச மாதிரி பிணை முறிப்பிரச்சனை. அந்த முறியோடை யூ.என்.பிக்குச் சளி பிடிக்கத் துவங்கினது இன்னும் விடேல்லை. இப்ப சளி சன்னி ஆக்குமோ எண்டு பயமாக்கிடக்கு. இனி கை வைத்தியம் ஒண்டுக்கும் சரிவராது. ஒப்பிரேசன் தான் எண்டு பேப்பர் கடையடியிலை கதைச்சவை. ஒப்பிரேசன் செய்தாலும் ஆளுக் கென்ன நடக்கும் எண்டு ஆக்கள் கேக்கினம்.

அந்தக் காலத்திலை அரசாளுறது எண்டது எல்லாருக்கும் சரிவராத விசியம். அதுக் கெண்டு ஒரு துணிவும், தலையும் வேணும் எண்டு அப்பு சொல்லுறவர். நல்லமுறையிலை ஆட்சி செய்யிறதெண்டது கஸ்டம் தான் எண்டு கதைக்கிறவை. ஆனாலும் செய்யிறதெல்லாத்தையும் தருமமாச் செய்து பாருங்கோ. எப்பிடி வருமெண்டு? ஊருக்கெண்டு செய்யிற விசியங்கள் எல்லாம் சும்மா மேலெழுந்த மாதிரி வந்து செய்யிறதில்லை. அது அடி மனசிலை இருந்து வர வேணும். எந்தக் கட்டத்திலையும் களவு, பொய், ஏமாத்த வேணும் எண்டது துளி கூட இருக்கப்பிடாது. நூறுவீதம் கடவுளிட்டைச் சறண்டர் ஆனவை மாதிரித் தான் எல்லா விசியத்திலையும் இருக்க வேணும். அப்பதான் சேவையும் சித்திக்கும்.

ஏதோ, வேதாந்தம் பேசிறமாதரிக் கதைக்கிறான் எண்டு பாராதையுங்கோ.சேவை எண்டு வெளிக்கிட்டிட்டமோ? அதுக்குப் பிறகு என்ரை, உன்ரை, தெரிஞ்சது, தெரியாதது எண்டு பாக்கப்பிடாது. சமனா எல்லாத்தையும் செய்ய வேணும். அது அரசியலெண்டாலும் சரி, அன்னதானம் எண்டாலும் சரி. தூக்கிப் பாத்தால் திராசிலை முள்ளு நிண்ட மாதிரி ஆடாமல், அசையாமல், நடுவிலை நிக்க வேணும். நாங்கள் சிறு சிலை படிக்கேக்கை என்ன விளையாட்டுக்கே சிபிச் சக்கரவர்த்தி, முல்லைக்குத் தேர் குடுத்தவர் பாரி, பசுக் கண்டு செத்ததுக்கு மணி அடிச்சு சோழ மன்னரிட்டை பசு நீதி கேட்டது எண்ட கதை எல்லாத்தையும் சொல்லித் தந்தவை. எல்லாரும் தங்கடை, தங்கடை நாளாந்த வாழ்க்கையிலை நல்லதைச் செய்யட்டுக்கு எண்டு தானே உதைச் சொல்லித் தந்தவை. அதைவிட்டிட்டு நாங்கள் என்ன செய்யிறம் எண்டால் எல்லாத்தையும் எங்களுக்குச் சாதகமா வைச்சுக் கொண்டு தர்மத்தையும், கடவுள் எண்டு ஒருத்தர் இருக்கிறார் எண்டதையும் மறந்து எல்லாத்தையும் செய்து கொண்டிருக்கிறம். எல்லாத்தையம் தலை கீழா மாத்த ஒரு சுனாமி போதும். ஒரு சூறாவளி போதும், ஒரு வெள்ளம் போதும், ஒரு பெரு மழை போதும். ஒரு நிமிசத்திலை எல்லாம் மாறிப் போம். தலை கீழாப்போம். பிறகு.....?

- வில்லங்கம் விநாசி

# சமஷ்டி தீர்வு கோரும் கட்சிகள்: ஒன்றாகப் பயணிக்க வேண்டும்

## சுமந்திரன் எம்.பி. அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 15

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இயங்கும் கட்சிகள் - விசேடமாக சமஷ்டி தீர்வைக் கோரும் கட்சிகள் ஒன்றிணைந்து பயணிக்கவேண்டியது கட்டாயம் என கூறியிருக்கும் தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன், எங்களுடைய இந்த நிலைப்பாட்டுக்கு பல கட்சிகளிடம் இருந்து சாதகமான பதில்கள் கிடைத்திருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் வெளியான உடனேயே தெற்கில் உள்ள நிலைமைகளை கருத்தில் கொண்டு தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இயங்கும் கட்சிகள் - விசேடமாக சமஷ்டி தீர்வைக் கோரும் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதனை கூறியிருக்கிறேன். என்னுடைய கருத்து தேர்தல் முடிவுகள் வெளியாகும் நிலையில் சூட்டோடு சூடாக கூறப்பட்ட கருத்தாக இருக்கலாம்.

ஆனால் இந்தக் கருத்து அத்தியாவசியமான ஒரு கருத்தாகும். இதே போல் நான் கூறியிருந்த கருத்துக்கு ஆதரவாக பொது அமைப்புக்கள் பல கூட்டாகவும், யாழ். ஆயர் உள்ளிட்டோர் தனித்தனியாகவும் அறிக்கைகள் மற்றும் கருத்துக்களை கூறியிருக்கின்றார்கள். ஆகவே எமது நிலைப்பாட்டுக்கு சாதகமான கருத்துக்கள் வெளியாகியிருக்கின்றது.

மேலும் நடைபெற்ற உள்ளூராட்சி சபை தேர்தல் முடிவுகளின் பிரகாரம் எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெறாத நிலையில் உள்ளூராட்சி சபை தேர்தலில் அதிகபடியான ஆசனங்களை பெற்றிருக்கும் கட்சிகள் ஆட்சியமைப்பதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தடையாக இருக்காது. அவர்களுக்கான ஒத்துழைப்பை வழங்கும் என கூறியிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இந்த முடிவுக்கு ஒத்துழைக்கும் கட்சிகளுக்கு கூட்டமைபின் சார்பில் நன்றிகள்.

இதேபோல் மற்றைய கட்சிகள் ஆட்சியமைக்கும் இடங்களில் அவர்களுக்கு தடையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்காது என்பதனையும் நான் கூறி வைக்க விரும்புகிறேன். எனவே ஒருவருக்கொருவர் இடையூறாக இல்லாமல் இணைந்து செயற்படும் நிலைப்பாட்டினையும் நாங்கள் வரவேற்கிறோம். மேலும் உள்ளூராட்சி உறுப்பினர்கள் சிறந்த சேவையை மக்களுக்கு வழங்கவேண்டும் எனவும் கூறினார். (ச)

## இன்றைய கேலிச்சித்திரம்




# கடல் அட்டையுடன் இந்தியர் கைது

திருகோணமலை, பெப்.15

நுரைச்சோலை கரம்பைப் பகுதியில் கடல் அட்டைகளை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த இந்தியர் ஒருவர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

களஞ்சியப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் இரண்டரை கோடி ரூபா பெறுமதியுடையவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள இந்தியர் தமிழ் நாட்டை சேர்ந்தவர் ஆவார். சந்தேக நபர் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தொடர்ச்சிகள்

### மஹின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லங்கா ஆகிய நிறுவனங்களில் 2006ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி முதல் 2018 ஜனவரி 31 ஆம் திகதி வரை இடம்பெற்றதாகக் கருதப்படும் மோசடிகளைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவினால் வழங்கி வைக்கப்பட்டன.

ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் அனில் குணரத்ன நியமிக்கப்பட்டார். இவரின் கீழ், ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஈ.ஏ.ஜீ.ஆர். அமரசேகர, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க, ஓய்வுபெற்ற பிரதி கணக்காய்வாளர் நாயகம் எம்.டீ.ஏ. ஹரல்ட் மற்றும் இலங்கை கணக்கீட்டு, கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.ஜே.கே. கீகனகே ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாக செயற்படவுள்ளனர். (ச)

### ஆர்னோல்டே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனித்து ஆட்சி அமைக்கப் போதுமான ஆசனங்களைப் பெற்றிருக்கவில்லை. இதனால் தொங்கு மாநகர சபை ஆட்சியே ஏற்படுத்தப்படும் நிலை உருவானது. இதனால் மேயரை மாநகர உறுப்பினர்களே தெரிவு செய்யும் நிலை இருந்தது.

இந்நிலையில், நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் உயர் மட்டக் கலந்துரையாடல் இடம்பெற்றது. அக்கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், த. சித்தார்த்தன், ரெலோவின் செயலாளர் என். ஸ்ரீகாந்தா ஆகியோர் பங்கேற்ற இந்தக் கலந்துரையாடலில் பின் யாழ். மாநகர மேயராக ஆர்னோல்ட்டே நியமிக்கப்படுவார் என சுமந்திரன் எம்.பி. உறுதியாகத் தெரிவித்தார். (ச)

### ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியுள்ளார் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

நேற்றைய தினம் ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசியத்தின் பெயரால் கடந்த 8 வருடங்களாக செய்த மோசமான தவறுகளுக்கு பொறுப்புகூற இயலாதவர்கள் தமிழ்தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என கேட்பது வேடிக்கை. ஒற்றுமைக்கும் ஒரு அர்த்தம் இருக்க வேண்டும். அர்த்தம் இல்லாத ஒற்றுமை தேவையில்லை.

நாம் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கும், அதன் அங்கத்துவ கட்சிகளுக்கும் எதிரானவர்கள் அல்ல. அந்த விம்பத்தை காட்டுவது எங்கள் கட்சியின் நிலைப்பாடும் அல்ல. ஆனால் தமிழ்தேசிய கூட்டமைப்பும், அதன் அங்கத்துவக் கட்சிகளும் தமிழ் மக்களுக்கு விரோதமாக செயற்பட்டன. அர்த்தமில்லாமல் ஒற்றுமைப்படுவது ஒற்றுமையாகாது. உள்ளூராட்சி சபைகளில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை எடுக்காத நிலையில் அதிகபடியான ஆசனங்களை பெற்ற கட்சி ஆட்சி அமைப்பதற்கும், அவர்கள் முன்னெடுக்கும் மக்கள் நலன்சார்ந்த செயற்பாடுகளுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தடையாக இராது. (ச)

### பட்டப்பகலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரின் சடலம் வீட்டின் பின்புறமிருந்து வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டது. கணவர் வேலைக்கும் அயலவர்கள் அக்கிராமத்தில் இடம்பெற்ற பூப்புனித நீராட்டு விழாவுக்கும் சென்றிருந்த சமயமே இக்கொலை இடம்பெற்றுள்ளது.

கொலைக்கான காரணம் தெரியவரவில்லை. இறந்த பெண்ணுக்கு ஏழு வயதில் ஒரு மகனும் ஒன்றரை வயதில் ஒரு மகளும் உள்ளனர்.

விசாரணைகளை இராமநாதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

### கனவான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்த முனைந்தது.

எந்தச் சமரசமும் எட்டப்படாத நிலையில் யார் ஆட்சி அமைப்பது என்பதில் இழுபறி நிலை காணப்பட்டது. இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் எழுதப்படாத கனவான் உடன்பாடு ஒன்றுக்கு முன்வந்துள்ளன எனக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதிக ஆசனங்களைக் கைப்பற்றிய பருத்தித்துறை, சாவகச்சேரி நகர சபைகளிலும், நல்லூர் பிரதேச சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு சுயேச்சை முன்வந்திருப்பதால் அங்கும் அக்கட்சி ஆட்சி நடத்துவது, யாழ். மாநகரம் மற்றும் ஏனைய நகர, பிரதேச சபைகளில் அதிக ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆட்சி நடத்துவது என்பதே அந்த உடன்பாடு.

நிதி, திட்டமிடல் விடயங்களுக்கு சகல கட்சிகளும் கொண்ட குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு நிர்வாகம் முன்னெடுக்கப்படும் எனக் கூறப்படுகின்றது. (ச)

### பகையாளியாகவே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகம் என்.சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபை தேர்தலின் பின்னான நிலைமைகள் தொடர்பாக நேற்று மாலை யாழ்.நகரில் நடைபெற்ற ரெலோ அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே என்.சிறீகாந்தா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் பல கட்சிகள் அறுதிப் பெரும்பான்மையை எடுக்க தவறியிருக்கின்றது.

இந்நிலையில் எவருடனாவது கூட்டிணைந்தே ஆட்சியை எதிர்கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இந்த நிலையில் கொள்கை இல்லாத மற்றும் சந்தர்ப்பவாத அரசியல் கட்சிகளுடன் கூட்டிணைய நாங்கள் தயாராக இல்லை. மக்களுடைய ஆணைக்கு தலைவணங்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைக்கும்.

சபைகளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்காளியாகவும் இருக்கவேண்டாம், பகையாளியாகவும் இருக்கவேண்டாம். அதேபோல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆட்சியமைக்கும் பருத்தித்துறை நகரசபை மற்றும் சாவகச்சேரி நகரசபை போன்றவற்றில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பங்காளியாகவும் இருக்காது, பகையாளியாகவும் இருக்காது. எனவே இருதரப்பும் ஒருவருக்கொருவர் தடையாக இருக்காமல் இருக்கவேண்டும்" - என்றும் கூறினார்.

### ஐ.ம.சு.மு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவிழ்த்து புதிய அரசை உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

இது தொடர்பாக அந்த முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர, தாம் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார் எனத் தெரிவித்தார்.

225 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றில் பெரும்பான்மையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிரூபிக்கும். எவ்வாறு இருந்தாலும் ரணில் விக்கிரமசிங்கவைப் பதவியில் இருந்து அகற்ற அரசியல் சாசனம் தடையாக இருக்கும்.

113 பேரின் ஆதரவுத் தீர்மானத்தை முதலில் தாக்கல் செய்துவிட்டால் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அவரை ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்கமுடியாது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் 96 உறுப்பினர்களே உள்ளனர். இதில் 55 பேர் மகிந்த ராஜபக்ஷவையும், 41 பேர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் ஆதரிக்கின்றனர்.

ஐ.தே.க. தலைமையிலான அரசைக் கவிழ்க்க மகிந்த அணி நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும். ஆனாலும் 17 உறுப்பினர்களின் ஆதரவு இன்னமும் தேவை.

ஐ.தே.கட்சியில் போட்டியிட்டவர்கள். ஆனால் அவர்கள் ஐ.தே.கவினர் இல்லை. ஜனாதிபதிக்கு ஆதரவை வழங்கத் தயாராக உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

### யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விருப்பம் தெரிவித்துள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் சரியான முறையில் பயன்படுத்துவோம்.

நாம் அதிகப்படியான ஆசனங்களை வெற்றி கொண்ட பருத்தித்துறை, சாவகச்சேரி நகர சபைகளிலும் ஆட்சி அமைப்போம் - என்று கஜேந்திரகுமார் மேலும் கூறினார். (ச)


# புற்றுநோய்க் கட்டிகளை கட்டுப்படுத்த மருந்து

நியூயோர்க், பெப். 15

புற்றுநோய்க் கட்டிகளுக்குச் செல்லும் ரத்தத்தைத் தடுத்து புற்றுநோய் செல்களை அழிக்கும் புதிய சிகிச்சை முறையைக் கண்டுபிடித்து மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

இருதய நோய்க்கு அடுத்து புற்றுநோயால் ஏற்படும் உயிர் இழப்புகள் அதிகமாக இருக்கின்றது. ஆரம்ப நிலையில் கண்டுபிடிக்கப்படும் புற்றுநோய் எளிதாக குணப்படுத்தப்படுகின்றது. சில வகை புற்றுநோய்கள் அறிகுறிகள் இல்லாமல் உருவாகும். இதனால் அவற்றைக் குணப்படுத்த முடியாமல் போகிறது. கீமோதெரபி, அலோபதி போன்ற பல சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டாலும் முழுமையாக குணப்படுத்த முடியவில்லை.

இந்நிலையில், அமெரிக்காவைச்



சேர்ந்த அரிசோனா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் புதிய சிகிச்சை முறையைக் கண்டறிந்துள்ளனர். அதனை எலியின் உடலில் பரிசோதித்து வெற்றி பெற்றதாகக் கூறியுள்ளனர்.

இந்தப் புதிய சிகிச்சையின் படி, முதலில் புற்று நோய் கட்டிகளுக்கு செல்லும் இரத்த ஓட்டத்தைத் தடுக்க வேண்டும். உடலில் அடிபட்ட போது இரத்தம் வெளியேறுவதைத் தடுக்க கொடுக்கப்படும் மருந்துகளை இந்த சிகிச்சை முறைக்கு பயன்படுத்துகின்றனர்.

இதனால் புற்றுநோய்ச் செல்கள் செயலிழக்கின்றன. அதன் பின் கட்டிகள் சுருங்கிக் கொண்டே இருக்கும். புற்றுநோய் செல்கள் பரவுவதும் குறையும்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட எலிகளிடம் செய்த சோதனையில், சிகிச்சைக்குப் பிறகு எலிகளின் வாழ்நாள் மற்ற எலிகளை விட இரண்டு மடங்காக அதிகரித்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர். மேலும் இதனை மனிதர்களை போன்ற உடல் உறுப்புகளைக் கொண்ட பாமா மினியேச்சர் பன்றியின் உடலிலும் சோதனை செய்தனர். விரைவில் மனிதர்களுக்கு இச்சோதனை செய்யப்படும் என மருத்துவர்கள் தெரிவித்தனர். (ஐ)



# நடிப்புக்கு முழுக்கு

சென்னை, பெப். 15

முழு நேர அரசியலில் கமல்ஹாசன் ஈடுபடப்போவதால் இனி நடிப்புக்கு முழுக்கு போடவுள்ளார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

நடிகர் கமல் தற்போது விஸ்வரூபம் -2, சபாஷ் நாயுடு படங்களில் நடித்து வருகிறார். விஸ்வரூபம் -2 படத்தின் பணிகள் அனைத்தும் முடிவடைந்து வெளிவரத் த்யாராக உள்ளது.

சபாஷ் நாயுடு படமும் ஓரளவு முடிந்துவிட்டது. இந்த இரு படங்களைத் தொடர்ந்து ஷங்கர் இயக்கத்தில் இந்தியன்-2 படத்தில் நடிக்க கமல் ஒப்பந்தமாகியுள்ளார். இதன் படப்பிடிப்பு நடைபெற்றுவருகிறது.

இப்படங்கள் முடிந்ததும் அவர் தீவிர அரசியலில் ஈடுபடவுள்ளார் எனத் தெரியவருகிறது. அவர் அரசியலுக்கு வருவதை அவரின் ரசிகர்கள் ஆதரித்தாலும், இனிமேல் அவர் சினிமாவில் நடிக்க மாட்டார் என்கிற செய்தி அவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் தேதி அப்துல் கலாம் இல்லத்தில் புதிய கட்சி, பெயர், கொள்கைகள் உள்ளிட்டவற்றை கமல் அறிவிக்கவுள்ளார்.

இந்த நிலையில் சமீபத்தில் அமெரிக்காவில் கமல்ஹாசன் அளித்த பேட்டியில்,

தமிழ்நாட்டில் மாற்றம் ஏற்படுத்தவே கட்சி தொடங்குகிறேன். கிராமங்களுக்கு உதவுவதே எனது எண்ணம். தமிழ் நாட்டை நாளைய தமிழர்களுடையதாக மாற்ற வேண்டும். மக்கள் மகிழ்ச்சியாக வாழக்கூடிய பிரதேசமாக மாற வேண்டும் என்பதே ஏனது கனவு.

தீவிர அரசியலில் இறங்கும் போது திரைப்படங்களில் நடிக்கும் எண்ணம் இல்லை என்றார். (ஐ)

# விஸ்வாசத்தில் அது இல்லை




சென்னை, பெப். 15

சிவா இயக்கத்தில் அஜித் நான்காவது முறையாக நடிக்கவிருக்கும் 'விஸ்வாசம்' படத்தில் ரசிகர்கள் மிகவும் ஆவலுடன் எதிர்ப்பார்த்த விஷயம் இல்லை என்று தகவல் வெளியாகியுள்ளது.

அஜித்துடன் சிவா 4ஆவது முறையாக இணையும் 'விஸ்வாசம்' படத்தின் படப்பிடிப்பு மார்ச் 15ஆம் திகதி தொடங்கும் என்று படக்குழு அறிவித்துள்ளது.

'விவேகம்' படத்தைத் தயாரித்த சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனம் இந்த படத்தையும் தயாரிக்கிறது. இதில் அஜித் ஜோடியாக நயன்தாரா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

டி.இமான்இசையமைக்கவுள்ளார். இவருடைய இசையில் அஜித் தன்னுடைய சொந்தக் குரலில் ஒரு பாடல் பாடவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகி இருந்தது.

இந்நிலையில் தற்போது இந்தத் தகவல் உண்மை இல்லை, அஜித் பாடல் எதுவும் பாட மாட்டார் என செய்திகள் வெளியாகியுள்ளன. (ஐ)

# பாகிஸ்தானுக்கு அமெரிக்கா நிதி

வொஷிங்டன், பெப். 15

அமெரிக்க நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில் நிபந்தனைகளுடன் பாகிஸ்தானுக்கு ரூ. 2200 கோடி நிதி உதவி வழங்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பரிந்துரை செய்துள்ளார்.

தீவிரவாதிகளின் சொர்க்கபுரியாக பாகிஸ்தான் திகழ்கிறது. அங்குள்ள தீவிரவாத அமைப்புகளுக்கு அளித்து வரும் ஆதரவை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும். அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தி வந்தது.

அதற்கு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இதனால் அதிபர் டிரம்ப் கடும் எரிச்சல் அடைந்தார். அதைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு வழங்கி வந்த ரூ. 13 ஆயிரம் கோடி நிதி உதவியை அமெரிக்கா நிறுத்தியது.


அதைத் தொடர்ந்து அமெரிக்கா-பாகிஸ்தானுக்கு இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது. இந்த நிலையில் தீவிர்வாத குழுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் நிதி உதவி



வழங்க விதிக்கப்பட்ட தடை நீக்கப்படும்என அமெரிக்க வெள்ளை மாளிகை அறிவித்தது.

அண்மையில் அமெரிக்காவின் நடப்பு ஆண்டுக்கான பட்ஜெட் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதில் பாகிஸ்தானுக்கு ரூ. 2200 கோடி நிதி உதவி வழங்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பரிந்துரை செய்துள்ளார்.

தீவிரவாத குழுக்களுக்கு எதிரான கடும் நடவடிக்கை மேற்கொள்ளும் பட்சத்தில் பாகிஸ்தானுக்கு இந்த நிதி உதவி வழங்கப்படும் என டிரம்ப் நிபந்தனை விதித்துள்ளார். (ஐ)



# கண் அடித்தது தப்பா?

சமீப காலமாகவே கேரளப் படங்களுக்கும், பாடல்களுக்கு தமிழ் சினிமா ரசிகர்களிடையே நல்ல வரவேற்புக் கிடைத்து வருகிறது. அந்த வகையில் பிரேமம் மலர் டீச்சர், ஜிமிக்கி கம்மல் ஷெரிலுக்குப் பின்னர் தற்போது டிரெண்டாகி வருகிறார் பிரியா வாரியர்.

மலையாளத்தில் 'ஹேப்பி வெட்டிங்', 'ஹசங்ஃஸ்' உள்ளிட்ட வெற்றிப் படங்களை இயக்கிய ஒமர் லூலு தற்போது 'ஒரு அடாரு லவ்' என்ற படத்தை இயக்கி வருகிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வரும் நிலையில், காதலர் தினத்தை முன்னிட்டு வீடியோப் பாடல் ஒன்றை கடந்த 9ஆம் திகதி படக்குழு வெளியிட்டது.

'மாணிக்ய மலராய பூவி' என தொடங்கும் அந்த பாடலை வினீத் ஸ்ரீனிவாசன் பாடியிருக்கிறார். ஒரு பள்ளியில் நடக்கும் கலை நிகழ்ச்சியின் போது மாணவர்கள் கூடியிருக்கின்றனர். அப்போது, தனது நண்பனைப் பார்த்து இரு புருவங்களையும் உயர்த்தியபடி பார்க்கும் பிரியாவின் பார்வை தான் சமூக வலைதளங்களில் தற்போது ட்ரெண்டாகி வருகிறது.

அதுமட்டுமில்லாமல் பிரியா வாரியருக்கென தற்போது ரசிகர் படையும் உருவாகியிருக்கிறது. தற்போது வரைக்கும் இந்த வீடியோவை ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் கண்டு களித்துள்ளனர்.

இந்நிலையில், பிரியா வாரியருக்கு எதிராக ஹைதராபாத் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. 'மாணிக்க மலராய பூவி' பாடல் வரிகள் இஸ்லாமியர்களின் மனதை புண்படுத்துவதாக கூறி பிரியா வாரியர் மற்றும் இயக்குநர் மீது ஐதராபாத் நகர காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.(ஐ)

# எதிரிகளைக் குடைந்தெடுக்கும் வசீகரப்பெண்



தென் கொரியாவில் நடைபெற்று வரும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கச் சென்ற எதிரி நாடான வட கொரியக்குழாமுடன், வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்-னின் சகோதரியான கிம் யோ-ஜாங்கும் சென்றுள்ளார்.

இவர் தென்கொரிய தொலைக்காட்சி பார்வையாளர்களை வசீகரித்துள்ளார். அவரைப் பற்றிய ஒவ்வொரு விடயங்களும் தொலைக்காட்சியில் நேரலையாக ஆராயப்பட்டது. அவரைப் பார்க்கும் போது என் இதயம் உருகுகிறது என்று பலரும் டுவிட்டரில் பதிவேற்றம் செய்துள்ளனர். அதுமட்டுமின்றி கிம் குடும்பத்தில் இப்படிப்பட்ட ஒரு பெண்ணா என்று தென்கொரியர்கள் மயக்கத்தில் உள்ளனர். (ஐ)



# மெரினாவில் குவிந்த காதல் ஜோடிகள்

சென்னை, பெப். 15

காதலர் தினத்தையொட்டி மெரினா கடற்கரை மற்றும் பூங்காக்களில் நேற்று காதலர்கள் ஏராளமானோர் குவிந்தனர். ரோஜாப்பூக்கள், பரிசுப் பொருட்கள் வழங்கி காதலர்கள் அன்பை பரிமாறினார்கள்.

உலகம் முழுவதும் பெப்ரவரி 14ஆம் திகதி காதலர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. சென்னையில் நேற்று மெரினா கடற்கரை, எலியட்ஸ் கடற்கரை, கிண்டி பூங்கா மற்றும் பல்வேறு பூங்காக்களில் நேற்றுக் காலை முதலே மோட்டார் சைக்கிள், கார்களில் வந்து காதலர்கள் திரண்டனர்.

புத்தாடைகள் அணிந்து வந்த காதல் ஜோடிகள் தங்களது அன்பை வெளிப்படுத்த காதல் பரிசுகள், ரோஜாப் பூக்கள் வழங்கி பரிமாறிக் கொண்டனர்.

இதனால் மெரினா கடற்கரை மற்றும் பூங்காக்கள் காதல் ஜோடிகளால் நிரம்பிக் காணப்பட்டது.

சினிமா திரையரங்குகளிலும் காதல் ஜோடிகள் கூட்டம் நிறைந்து காணப்பட்டது. சினிமா தியேட்டர்களிலும் காதல் ஜோடிகள் ரோஜாப் பூக்கள் வழங்கி தங்களது அன்பை பரிமாறிக் கொண்டனர். (ஐ)

# வசப்படுத்தியது இந்தியா!




## அரியணை!

ஒருநாள் கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலில் கூடுதல் புள்ளிகளுடன் இந்திய அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இந்திய - தென்னாபிரிக்க ஒருநாள் தொடர் ஆரம்பிக்கும் போது, ஒருநாள் போட்டித் தரவரிசையில் 121 புள்ளிகளுடன் தென்னாபிரிக்கா முதலிடத்தில் இருந்தது.

ஆனால் முதல் இரண்டு போட்டிகளில் இந்தியா வெற்றி பெற்றபோதே 2 புள்ளிகளைப் பெற்று 120 புள்ளிகளுடன் முதலிடத்திற்கு முன்னேறியது.

இந்நிலையில் தொடரைக் கைப்பற்றியுள்ளதால் இந்திய அணி முதலிடத்துக்கு முன்னேறியமை குறித்து அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்தியா 122 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. இரண்டாமிடத்தில் தென்னாபிரிக்காவும் (118), மூன்றாமிடத்தில் இங்கிலாந்தும் (116) உள்ளன. இலங்கை 84 புள்ளிகளுடன் 8ஆவது இடத்தில் உள்ளது.(ஐ)

போர்ட் எலிசபெத், பெப். 15

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 5ஆவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி 73 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரையும் தன்வசப்படுத்தியது.

இந்தியா மற்றும் தென்னாபிரிக்க அணிகள் இடையிலான 5ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி போர்ட்எலிசபெத் நகரில் நேற்றுமுன்தினம் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதன்படி முதலில் இந்திய துடுப்பெடுத்தாடியது.

தொடக்க வீரரான தவான் 34 ஓட்டங்களுடனும், விராட் கோலி 36 ஓட்டங்களுடனும், ரஹானேவும் ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இவர்களைத் தொடர்ந்து அணியின் ஓட்ட எண்ணிக்கை 236 ஓட்டங்களை எட்டிய போது ரோகித் சர்மா 115 ஓட்டங்களை விளாசிய நிலையில், நிகிடியின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் ஹென்ரிச் கிளாசென்னிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவருக்குப் பின்னர் வந்த ஹர்திக் பாண்ட்யா (0) அதே ஓவரில் தாழ்வாக வந்த பந்தில் விக்கெட் காப்பாளரிடம் சிக்கினார். அய்யர் 30 ஓட்டங்களையும், டோனி 13 ஓட்டங்களையும் சேர்த்து வெளியேறினர்.

இறுதியில் 50 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 274 ஓட்டங்களைச் சேர்த்தது. புவனேஷ்வர்குமார் 19 ஓட்டங்களுடனும், குல்தீப் யாதவ் 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

பின்னர் வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, அணித் தலைவர் மார்க்ராம் (32), டுமினி (1), டிவில்லியர்ஸ் (6), டேவிட் மில்லர் (36) ஆகியோர் சீரான இடைவெளியில் ஆட்டமிழந்தனர். ஒருமுனையில் விக்கெட்டுகள் சரிந்தாலும் மறுமுனையில் சிறப்பாக ஆடிய ஆம்லா 71 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் வெளியேறினார்.

இதேபோன்று கிளாசன் 39 ஓட்டங்களுடனும், பெஹ்லுக்வாயோ ஓட்டம் எதுவும் சேர்க்காமலும். ரபடா 3 ஓட்டங்களிலும், மோர்கல் ஓர் ஓட்டங்களிலும் மற்றும் சாம்சி ஓட்டம் எதுவும் சேர்க்காமலும் வரிசையாக ஆட்டமிழந்தனர். நிகிடி 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றார்.

இறுதியில் தென்னாபிரிக்க அணி, 42.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 201 ஓட்டங்களையே சேர்த்தது.

இதனால் இந்திய அணி 73 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணியை வீழ்த்தியுள்ளது. அதே வேளை, 6 போட்டிகளைக் கொண்ட இத்தொடரை இந்தியா 4-1 என்ற கணக்கில் முன்னிலையுடன்தொடரையும் கைப்பற்றியுள்ளது. (ஐ)

## வருத்தம்



மும்பை, பெப். 15

"கே.எல். ராகுல் மற்றும் சஞ்சு சாம்சனை மும்பை அணி ஐ.பி.எல். ஏலத்தில் எடுக்காதமை வருத்தமாகவுள்ளது" என அந்த அணியின் பயிற்சியாளர் மஹேல ஜெயவர்த்தன கூறியுள்ளார்.

ஐ.பி.எல். 2018 க்கான ஏலம் சமீபத்தில் நடந்து முடிந்தது. இதில் மும்பை அணி பொலார்ட், கம்மின்ஸ் போன்ற முன்னணி வீரர்களை ஏலத்தில் எடுத்துள்ளது.

இது குறித்துப் பேசிய இலங்கை அணியின் முன்னான் அணித்தல்லைவரும் தற்போதைய மும்பை அணியின் பயிற்சியாளருமான மஹேல ஜெயவர்த்தன,

"பொலார்ட் நியாயமான விலைக்கு வாங்கப்பட்டமை திருப்தியளிக்கிறது.அதே போல ஈவின் லீவிஸ், பெண் கட்டிங், கம்மின்ஸ் ஆகியோர் அணியில் உள்ளதும் மகிழ்ச்சியளிக்கிறது.

ஆனால் சஞ்சு சாம்சன் மற்றும் கே.எல் ராகுலை மும்பை ஏலத்தில் வாங்காதது வருத்தமளிக்கிறது. திறமையான வீரர்களான அவர்களை ஏலத்தில் வாங்குவது கடினம் என்பதை நான் அறிவேன்" எனக் கூறியுள்ளார். (ஐ)

## சறுக்கியதில் உயர்ச்சி

பியாங்சங், பெப். 15

தென்கொரிய ஒலிம்பிக்கில் பனிச்சறுக்குப் போட்டியில் அமெரிக்காவின் வைற் தங்கம் வென்று அந்நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

தென்கொரியாவின் பியாங்சங் நகரில் பீனிக்ஸ் பனி பூங்காவில் பனிச்சறுக்கு போட்டியின் இறுதிச் சுற்று நேற்று நடந்தது. இதில் அமெரிக்காவின் ஷான் வைற் 97.75 புள்ளிகளுடன் முதல் இடம் பெற்று தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

குளிர்கால ஒலிம்பிக்கில் இது அவரது 3ஆவது தங்கம் என்பதுடன், குளிர்கால ஒலிம்பிக் வரலாற்றில் அமெரிக்காவின் 100ஆவது தங்கப் பதக்கம் ஆகும். 2006 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளில் ஒலிம்பிக்கில் அவர் தங்கம் வென்றுள்ளார்.

அவருக்கு அடுத்து 2ஆவது இடத்தில் ஜப்பான் நாட்டின் அயுமு ஹிரானோ வெள்ளிப் பதக்கமும், 3ஆவது இடத்தில் அவுஸ்ரேலியாவின் ஸ்காட்டி ஜேம்ஸ் வெண்கல பதக்கமும் வென்றனர்.

இதுவரை நடந்த 4 பனிச்சறுக்குப் போட்டிகளிலும் அமெரிக்கா தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளது. (ஐ)




## பெடரர் நம்பிக்கை

ரோட்டர்டம், பெப். 15

"சர்வதேச டென்னிஸ் தரவரிசையில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் முதலிடத்துக்கு மீண்டும் வருவேன்" என்று ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஏடிபி ரோட்டர்டம் ஓபன் டென்னிஸ் போட்டியில் அரையிறுதி வரை முன்னேறும் பட்சத்தில் அண்மையில் அவுஸ்ரேலியன் ஓபனில் சம்பியன் பட்டம் வென்ற பெடரர் மீண்டும் முதலிடத்துக்கு வர முடியும்.

அவ்வாறு அவர் மீண்டும் முதலிடத்துக்கு வரும் பட்சத்தில், அதிக வயதில் (36) தரவரிசையில் முதலிடம் பிடித்த வீரர் என்ற பெருமை அவருக்குச் சேரும்.

இந்நிலையில், நெதர்லாந்தின் ரோட்டர்டம் நகரில் அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

"இந்த ஓபனில் வெற்றி பெற்று மீண்டும் தரவரிசையில் முதலிடத்துக்கு வருவேன். அது அவ்வளவு எளிதான காரியம் அல்ல என்பது எனக்குத் தெரியும். இருப்பினும் முயற்சி செய்வேன். அவுஸ்ரேலியன் ஓபனில் வெற்றி பெறுவேன் என்று எதிர்பார்க்கவில்லை. அந்தத் தொடரில் முதலிடத்துக்கு வர வேண்டும் என்ற நோக்கத்துடன் நான் விளையாடவில்லை. டென்னிஸ் மீது தீராக் காதல் கொண்டிருக்கிறேன். ரோட்டர்டம் ஓபனில் விளையாட ஆர்வத்துடன் காத்திருக்கிறேன்." என்றார். (ஐ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 15.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.